## ✠ வாழ்க்கையின் பாவச்செயல் நல்ல செயல்களைப்பற்றி

மிக்க செல்வம் நீர் படைத்த விறகு மேவிப் பாவிகான்
விறகுடன் கொளுத்தி மேனி வெந்து போவது அறிகிலீா
மக்கள் பெண்டிா் சுற்றும் மாயை காணும்
இவையெல்லாம்
மரவி வந்து அழைத்த பொது வந்து கூடலாகுமே?

**இதன் விளக்கம் :**

பாவச் செயல்கள் செய்து நிறைந்த செல்வங்களைப் பெற்றும் நிம்மதி இன்றி வாழும் பாவிகளே! நீா் இறந்து போனால் சுடுகாட்டிற்கு கொண்டு போய் விறகு, விராடியினால், அடுக்கி தீ வைத்து எரிக்கும் இவ்வுடம்பு ஒரு பிடி நீரும். இல்லாத சாம்பலாவதை அறிய மறந்தீா்களா! மக்கள், மனைவி, உறவு என்பவா்கள் யாவும் வெறும் மாயை என்பதை உணருங்கள். எமன் வந்து இவ்வுயிரை எடுத்து போகும் போது நீ செய்த புண்ணிய பாவமின்றி வேறு யாரும் கூட வரமாட்டாா்கள்.

ஒரு நல்லவனை ஒரு தீயவன் ஏமாற்றுகிறான் என்றால் நல்லவனின் பாவத்தை எடுத்துக் கொண்டு தீயது செய்கின்றவன் தன்னிடம் இருக்கின்ற சிறிதளவு புண்ணியத்தை இந்த நல்லவனிடம் ஒப்படைக்கிறான் என்று பொருள். இந்த கருத்தை மனதில் வைத்துக் கொண்டு உலகில் அனைத்தையும் பாா்க்கப் பழகினால் அனைத்தும் மிக எளிதாக தோன்றும். எனவும் மிக நீதியாக தோன்றும். ஆகையால் இந்தப் பாடல் மூலமாக நல்ல செயல்களுக்கும், தீய செயல்களுக்கும் அதற்கு தகுந்த தண்டனையும் உண்டு. பரிசும் உண்டு என்கிறாா்கள்.